தினமலர் 04/06/2019

# பி.வோக்., படிப்புக்கு அனுமதி பெற்ற கல்லூரிகள்

## இணையதளத்தில் விபரம் வெளியீடு

கோவை, ஜூன் 4–

தொழிற்கல்வி சார்ந்த படிப்புகளை, 2019 – 20ம் கல்வியாண்டில், புதிதாக துவக்க அனுமதி பெற்ற கல்வி நிறுவனங்களின் விபரங்களை, அகில இந்திய தொழில்நுட்ப கல்வி கவுன்சில், இணையதளத்தில் வெளியிட்டுள்ளது.

மத்திய அரசின் நிதியுதவியுடன், யு.ஜி.சி., அறிவுறுத்தலின் படி, பல்கலை, கல்லுாரிகளில், பி.வோக்., டி.வோக்., எனப்படும், தொழில் கல்வி சார்ந்த பட்டம், பட்டயப்படிப்புகள் வழங்கப்படுகின்றன. 2016ல் இப்படிப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டு, படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டு வருகின்றன.

நடப்பு கல்வியாண்டில், இண்டஸ்டிரியல் டூல்ஸ், சாப்ட்வேர் டெவலப்மெண்ட், ஆட்டோமெட்டிவ் டெக்னாலஜி, ஆட்டோமெட்டிவ் சர்வீஸ்சிங், மெடிக்கல் இமேஜினிங் டெக்னாலஜி, பேங்கிங் பினாசியல் சர்வீஸ் அண்ட் இன்சூரன்ஸ், கிராபிக்ஸ் அண்டு மல்டிமீடியா, பிரிண்டிங் அண்டு பேக்கேஜிங் டெக்னாலஜி, எலக்ட்ரானிக்ஸ் சர்வீஸ்சிங் உட்பட, பல்வேறு படிப்புகளை துவக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பிளஸ் 2 தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள், பி.வோக்., பட்டப்படிப்பு பிரிவுகளின் கீழும், பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள், டி.வோக்., பிரிவின் கீழும், பத்தாம் வகுப்பு தோல்வியுற்றவர்கள் சான்றிதழ் படிப்புகளிலும் சேரலாம். நாடு முழுவதும், 81 கல்லுாரி, பல்கலைகளில் இந்த பாடப் பிரிவுகளை புதிதாக துவக்க, அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில், சென்னை, 'அகாடமிக் மெரிடைம் கல்வியியல் மற்றும் பயிற்சி பல்கலை', கோவை இந்துஸ்தான் தொழிற்நுட்பக் கல்லுாரி, சென்னை டாக்டர்.

எம்.ஜி.ஆர்., கல்வியியல் மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை புனித பீட்டர் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை அறுபடை வீடு தொழிற்நுட்பக் கல்லுாரி என, நான்கு கல்லுாரிகளில், பி.வோக்., பட்டப்படிப்பு துவக்கப் பட்டுள்ளன.

புதிதாக அனுமதி பெற்ற கல்லுாரிகள், 2016 முதல் இப்பாடப்பிரிவுகள் செயல்பாட்டில் உள்ள கல்வி நிறுவனங்கள், அனுமதிக்கப்பட்ட மாணவர்கள் எண்ணிக்கை, பாடப் பிரிவுகளின் விபரங்கள் உள்ளிட்ட தகவல்களை, www.aicteindia.org என்ற இணையதளம் மூலம் அறிந்து கொள்ளலாம்.